பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
03 07 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- நாடாளுமன்ற மாநிலங்களவையில் பிரதமர் திரு நரேந்திரமோடி குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு இன்று பதிலளிக்கிறார்.
- உத்திரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் ஆன்மீக நிகழ்ச்சியில் ஏற்பட்ட நெரிசலில் 116 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.
- ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கஜகஸ்தான் சென்றடைந்தார்.
- அஸ்ஸாம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 28 மாவட்டங்களைச் சேர்ந்த 11 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- யூரோ கோப்பை கால்பந்து போட்டியில் துருக்கி அணி, காலிறுதிக்கு முன்னேறியது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு மாநிலங்களவையில் இன்று பதிலளிக்கிறார்.

முன்னதாக நேற்று மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு வினாத்தாள் வெளியான விவகாரத்தில் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

இந்த விஷயத்தில் அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் கூறினார்.

நீட் தேர்வு பிரச்சினை தொடர்பாக நாடு முழுவதும் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இதுபோன்ற குற்றங்களை தடுக்க வலுவான சட்டத்தை அரசு ஏற்கனவே கொண்டு வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்க வாய்ப்பு அளித்துள்ள மக்கள், எதிர்க்கட்சியான காங்கிரஸுக்கு 100 இடங்களைக்கூட வழங்கவில்லை என்று பிரதமர் குறிப்பிட்டார்.

அரசின் கொள்கைகள் மீது நம்பிக்கை வைத்து மக்கள் இந்த வாய்ப்பை வழங்கி இருப்பதாகவும், நாட்டிற்கு முன்னுரிமை என்ற கொள்கையுடன தமது அரசு செயல்படுவதாகவும் அவர் கூறினார்.

பிரதமரின் பதிலுரையின்போது எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டு இடையூறு செய்ததற்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் நேற்று மக்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

பிரதமரின் பதிலுரையைத் தொடர்ந்து மக்களவை மறுதேதி குறிப்பிடாமல் நேற்று ஒத்தி வைக்கப்பட்டது.

[]<<<>>>[]

மக்களவையில் பிரதமர் திரு நரேந்திரமோடியின் பதிலுரையின்போது எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி நடந்து கொண்ட விதம் கண்டிக்கத்தக்கது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ குற்றம்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய அவர், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு காங்கிரஸ் கட்சிக்கு மூன்று மணி 48 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டதாகக் .கூறினார்.

மணிப்பூரைச் சேர்ந்த ஒரு உறுப்பினருக்கு நேற்று விவாதத்தில் பேச அனுமதி வழங்கியபோதிலும், காங்கிரஸ் கட்சி வேண்டுமென்றே மணிப்பூர் உறுப்பினரை பேசுவதற்கு அனுமதிக்கவில்லை என்று அவர் குற்றம்சாட்டினார்.

பிரதமரின் உரையை உறுப்பினர்கள் கேட்கவிடாமல் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து கூச்சலில் ஈடுபட்டதாகவும், அதற்கு கண்டனம் தெரிவிப்பதாகவும் திரு கிரண் ரிஜிஜூ கூறினார்.

[]<<<>>>[]

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி மக்கள் பிரச்சினைகளை பேசுவதில்லை என்று தெலங்கானா முன்னாள் ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் குறை கூறியுள்ளார்.

நெல்லையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவையில் திரு ராகுல்காந்தியின் பேச்சு, அவை விதிகளை மீறும் வகையில் அமைந்திருப்பதாகத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

உத்திரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் ஆன்மீக் நிகழ்ச்சி ஒன்றில் நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 116-ஆக அதிகரித்துள்ளது.

ஹத்ராஸ் மாவட்டம் ரதிபன்பூர் கிராமத்தில் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் ஒரே நேரத்தில் வெளியேறியதால் ஏற்பட்ட நெரிசல் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டதாக அம்மாநில தலைமைச் செயலாளர் திரு மனோஜ் குமார் சிங் கூறியுள்ளார்.

ஏராளமானோர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து மீட்புப் பணிகள் குறித்து முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் உயரதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார்.

விபத்து நேரிட்ட பகுதிக்கு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை அனுப்பியதுடன், நிலைமை குறித்து கேட்டறிந்தார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்கப்படும் என்றும் திரு யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஆக்ரா கூடுதல் காவல்துறை தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், 24 மணி நேரத்தில் அறிக்கை அளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதகாவும் உத்திரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை தலைமை இயக்குநர் திரு பிரசாந்த் குமார் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உத்திரபிரதேச முதலமைச்சருடன் பிரதமர் திரு நரேந்திரமோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த சம்பவம் குறித்து கேட்டறிந்தார்.

மாநில அரசுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு அளிக்கும் என்று அப்போது பிரதமர் உறுதியளித்தார்.

பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் திரு நரேந்திரமோடி அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நெதர்லாந்து புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ள **Dicks choof** -க்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள பிரதமர், இந்தியாவுடனான நெதர்லாந்தின் நல்லுறவுகள் மேலும் வலுவடையும் வகையில் இணைந்து செயல்படுவதை தாம் எதிர்நோக்கி இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நீர் மேலாண்மை, வேளாண்மை உள்ளிட்ட ஆட்டோமொபைல் மற்றும் புதிய தொழில்நுட்ப துறைகளில் இணைந்து செயல்பட விரும்புவதாகவும் திரு நரேந்திரமோடி அதில் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானா சென்றடைந்தார்.

நாளை முதல் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பங்கேற்க சென்றுள்ள இந்திய குழுவினரை கஜகஸ்தான் வெளியுறவு துணை அமைச்சர் **Alibek bakayev** விமான நிலையத்தில் வரவேற்றார்.

பின்னர் அந்நாட்டு அமைச்சருடன் திரு ஜெய்சங்கர் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

மத்திய ஆசியப் பகுதியில் இந்தியாவின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் இந்த பேச்சுக்கள் அமைந்ததாக திரு ஜெய்சங்கர் தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

மாநாட்டுக்கு இடையே பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் திரு ஜெய்சங்கர் சந்தித்து பேச்சு நடத்த திட்டமிட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

இந்த ஆண்டு தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தகுதி உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இம்மாதம் 15-ஆம் தேதிக்குள் நல்லாசிரியர் விருதுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்குமாறு அந்த அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் மூன்று நிலைகளில் 50 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு புதுதில்லியில் செப்டம்பர் மாதம் ஐந்தாம் தேதி நடைபெறும் ஆசிரியர் தின விழாவில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விருதுகளை வழங்குவார் என கல்வி அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

அஸ்ஸாம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக 28 மாவட்டங்களைச் சேர்ந்த 11 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் **Tin sukia, dhemaji** மாவட்டங்களில் மூன்று பேர் உயிரிழந்ததை அடுத்து, உயிரிழந்தோர் எண்ணிக்கை 38-ஆக அதிகரித்துள்ளது.

இரண்டாயிரத்து 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி இருப்பதாகவும், 42 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவிலான பயிர்கள் சேதமடைந்திருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

மொகரம் பண்டிகையையொட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்து ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா தலைமையில் நேற்று ஸ்ரீநகரில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

மதத் தலைவர்களுடன் பல்வேறு பிரச்சினைகள் குறித்து காவல்துறை அதிகாரிகள் ஆலோசனை நடத்தி சுமூகமான முறையில் பண்டிகையைக் கொண்டாட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திரு மனோஜ் சின்ஹா அப்போது கேட்டுக் கொண்டார்.

பல்வேறு பகுதிகளுக்கும் சாலை போக்குவரத்தை தடையின்றி உறுதி செய்ய மாவட்ட நிர்வாகம் மற்றும் உயரதிகாரிகள் தேவையான அறிவுறுத்தகல்களை வழங்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

மத வழிபாட்டு தலங்களில் பாதுகாப்பு மற்றும் மருத்துவ வசதிகள் கிடைப்பதை உறுதி செய்யுமாறும் திரு மனோஜ் சின்ஹா அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

சத்திஷ்கர் மாநிலம் நாராயண்பூர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஐந்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

**Koh kameta** பகுதியில் மாவோயிஸ்ட் அமைப்பினர் பதுங்கி இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து காவல்துறையினருடன் இணைந்து அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில் அவர்கள் கொல்லப்பட்டதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு பிரபாத்குமார் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினர் மீது மாவோயிஸ்ட் தீவிரவாதிகளும் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே சுக்மா மாவட்டத்தின் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஒன்பது மாவோயிஸ்ட் தீவிவாதிகள் கைது செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

இலங்கையின் மன்னாரில் மாது வழிபாட்டுத் தலத்தில் இந்திய நிதி உதவியுடன் விடுதிகள் கட்டுவதற்கு கூடுதல் நிதி ஒதுக்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தை இலங்கைக்கான இந்திய தூதர் திரு சந்தோஷ் ஷா-வும், அந்நாட்டு நகர்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு சத்தியானந்தாவும் முறைப்படி பரிமாறிக் கொண்டனர்.

குறைந்த செலவில் வீடுகள் கட்டும் திட்டத்திற்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியுடன், கூடுதலாக இலங்கையின் பத்து கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

விண்வெளியில் 2033-ஆம் ஆண்டுக்குள் ரஷ்யா தனது புதிய மையத்தை அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.

விண்வெளி நிலையத்தின் வடிவமைப்பு, கட்டுமான நடவடிக்கைகள் உள்ளிட்ட விவரங்களை அந்நாட்டு விண்வெளி கழகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டள்ளது.

மனிதர்களுடன் விண்வெளி கப்பலை அனுப்பி சோதனை மேற்கொள்வது, பூமியிலிருந்து விண்வெளிக்கான உள்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வது உள்ளிட்ட விஷயங்கள் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கான திட்ட அறிக்கைக்கு ரஷ்ய விண்வெளி மையத்தி.ன் தலைவர் அதிகாரப்பூர்வ ஒப்புதல் வழங்கி இருப்பதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

யூரோ கோப்பை கால்பந்து போட்டியில் துருக்கி அணி, காலிறுதிக்கு முன்னேறியது.

ஜெர்மனியில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் துருக்கு இரண்டு – ஒன்று என்ற கோல் கணக்கில் ஆஸ்த்ரியா அணியை வீழ்த்தியது.

**[]<<<>>>[]**

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் முன்னணி வீரர் நோவக் ஜோக்கோவிச் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**[]<<<>>>[]**